*1995 நவம்பர் 3]* [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

ஆலோசனைகளின் பேரில் நிச்சயமாக கடத்தப்பட்டுள்ள மூன்று வனத்துறை அலுவலர்களை விரைவில் மீட்போம் என்பது உறுதி. கடத்தப்பட்டுள்ள வனத்துறை அலுவலர்களின் குடும்பங்களுக்குத் தேவையான பாதுகாப்பை எங்கள் அரசு வழங்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு காலத்தில் காவல்துறை அதிகாரிகளையும், வனத்துறை அதிகாரிகளையும் மிரட்டி வந்ததோடு தொடர்ந்து பல குற்றங்கள் புரிந்து வந்தான் சந்தனக்கடத்தல் வீரப்பன். எங்கள் அரசு பதவி ஏற்ற பின்புதான், தமிழகக் காவல் துறையின் சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்பட்டது. அந்தப் படை கர்நாடக அதிரடிப் படையினரோடு கூட்டாக இணைந்து வீரப்பனைப் பிடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டது. இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் வீரப்பன் கும்பலின் எண்ணிக்கையும் குறைந்தது, அவர்களிடமிருந்த ஆயுதங்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இதை இந்த நாட்டு மக்கள் நன்கறிவார்கள். தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மீட்புப் பணிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் என்பதால் மேற்கொண்டு எந்தத் தகவலையும் இந்த அவைமுன் வைக்க இயலவில்லை. இருப்பினும், உங்கள் அனைவரின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, கடமையாற்றச் சென்ற வனத்துறை அலுவலர்களை மீட்பதில் தேவையான உறுதியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

### (ஆ) இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போரால் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த பிரச்சினை. திரு. பரிதி இளம்வழுதி, இலங்கை இனத்தவரிடையே ஏற்பட்டுள்ள சூழ்நிலையை இந்தப் பேரவையில் எழுப்புவதற்காக "இலங்கை இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டு வருகின்ற போர் காரணமாக தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற அந்தப் பிரச்சினையை இந்தப் பேரவையில் எழுப்புவதற்காக பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்று பேரவை விதி *56*-ன் கீழ் ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். அதேபோன்று திரு. தாமரைக்கனியும் ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். ஆனால், இந்தப் பிரச்சனையைப் பொறுத்தமட்டில்

இந்த அரசோ, இந்த அவையோ நேரடியாக விவாதித்து ஒரு முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலை இல்லை என்பதை அனைத்து உறுப்பினர்களும் அறிவீர்கள். இதில் ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றாலும், இந்திய அரசுதான் இலங்கை அரசோடு பேசி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். எனவே இதை விவாதப் பொருளாக இங்கே விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கொடுத்த அந்த அறிவிப்பு என்னால் நிராகரிக்கப்பட்டு இருக்கிறது. இருந்தாலும், அவர்களுடைய உணர்வை இந்தப் பேரவைக்குத் தெரிவிக்கின்ற வகையில் அவர் கொடுத்துள்ள அந்த அறிவிப்பை மட்டும் இங்கே வாசிக்கலாம். அதற்கு மேலே பேசி அது விவாதப் பொருளாக ஆகக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அதுபோல அரசாங்கமும் அதற்கு பதில் அளிப்பதாக இருந்தால் அவர்களுடைய உணர்வை மட்டும் தெரிவிக்கலாம். மேற்கொண்டு இதில் என்னென்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை எல்லாம் தெரிவித்து விவாதப் பொருளாக இதை ஆக்காமல் அரசாங்கம் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனவே, பரிதி இளம்வழுதி அதை மட்டும் நீங்கள் வாசிக்கலாம்.

**திரு. இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு தாங்கள் வழங்கிய இந்த வாய்ப்புக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உணர்வுகளை வெளிப்படுத்துகிற வகையில் நீங்கள் எனக்குக் கொடுத்திருக்கின்ற அறிவிப்பை வாசியுங்கள் என்று தான் சொன்னேன்.

**திரு. இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் இந்தப் பேரவை எந்த இறுதி நடவடிக்கையும் எடுக்க முடியாது என்பதை நான் நன்கு உணர்ந்து இருக்கிறேன். அதனால் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்தப் பேரவைக்கு இறுதி நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் இலலையென்றாலும்கூட, இந்திய அரசாங்கத்தை கேட்டுக்கொள்ள இந்தப் பேரவைக்கு உரிமை இருக்கிறது. நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். உலகத்திலே மற்ற இனங்களெல்லாம் பாதுகாப்போடு, வசதியோடு வாழ்கின்ற காரணத்தால்...

*1995 நவம்பர் 3]*

முற்பகல் *11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பத் திரும்ப நீங்கள் சொல்வதால் விவாதப் பொருள் ஆகிவிடும். இதில் நம்முடைய ஒட்டுமொத்த உணர்வுகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் இதை விவாதப் பொருள் ஆக்கினால்--இந்திய அரசாங்கத்தின் கையில் இல்லாத பிரச்சினையில் போய் தலையிடமுடியாது. இந்திய அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பிரச்சினை என்றால் நாம் இந்திய அரசாங்கத்தைக் கேட்கலாம். இது அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட பிரச்சினைகூட அல்ல. இன்னொரு நாட்டினுடைய பிரச்சினை. ஆகவே இதை பேரவை விதி 56-ன்கீழ் ஒத்திவைத்து விவாதப் பொருள் ஆக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் உங்களுடைய உணர்வுகளைத் தெரிவிப்பதற்கு, நீங்கள் கொடுத்த அறிவிப்பை மட்டும் வாசிப்பீர்களானால்--நான் அரசாங்கத்திற்கும் தெரிவித்திருக்கிறேன். நீங்கள்கூட இதை விவாதப் பொருள் ஆக்கி பதில் அளிக்க வேண்டாம், உங்களுடைய உணர்வுகளைத் தெரிவிக்கலாம் என்றுதான் தெரிவித்திருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் சொல்லிவிட்டீர்கள், போதும். நானே படித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நானே படித்துவிடுகிறேன். நீங்கள் கொடுத்த அறிவிப்பு "சிங்கள அரசும், சிங்கள இராணுவமும் இலங்கையில் வாழும் அப்பாவித் தமிழர்களை அன்றாடம் கொன்று குவித்து இனப் படுகொலை நடத்தி வருகிறது. இதனால் தமிழ்நாட்டு மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும், எஞ்சியுள்ள தமிழர்களைக் காப்பாற்ற இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்தும் விவாதிக்க" என்று கேட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே விவாதிப்பதற்கு ஏதுமில்லை. அரசின் நிலையை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).. இலங்கையிலே வாழும் தமிழர்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தரப்பட வேண்டும். அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதையும், அவர்கள் தங்கள் உயிரையும், உடைமையையும் இழக்கும் சூழ்நிலையையும் தடுத்து நிறுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது குறித்து, இலங்கைவாழ்

தமிழர்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புக் கொடுப்பது பற்றி இந்திய அரசு இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். இது குறித்து தமிழக அரசும் இந்திய அரசுடன் தொடர்பு கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, உங்களுடைய உணர்வைத் தெரிவித்துவிட்டீர்கள், போதும். அதற்குமேல் இதில் விவாதிக்க முடியாது.

**திரு. இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தப் பேரவையின் மூலம் இந்திய அரசை நிர்பந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசாங்கம் கேட்டுக் கொள்ளும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். அதற்குமேல் வேண்டாம். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த உணர்வுகளை அரசாங்கமே மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேலும் வேண்டாம், (குறுக்கீடு) (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் உங்கள் உணர்வுகளைத் தெரிவித்து விட்டீர்கள்.

**திரு. இளம்வழுதி:** இந்திய அரசாங்கத்தை நிர்பந்திப்போமானால் அங்கே எஞ்சியுள்ள தமிழர்கள் காப்பாற்றப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் உணர்வுகளைத் தெரிவித்துவிட்டீர்கள். இதில் நடவடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்டார்கள். அதோடு இந்தப் பிரச்சினை போதும். பேரவை விதி 110-ன் கீழ் (குறுக்கீடு)....

**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:** ஆலங்குளம் பிரச்சினை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ராமசுப்பு, நான் அனுமதி மறுத்திருக்கிறேன். ஏற்கனவே அனுமதி மறுத்த பிரச்சினையோடு சேர்த்து இதற்கும் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுக்கப்பட்டதற்குப் பிறகு பேச முடியாது (குறுக்கீடு). திரு. இளம்வழுதி

வேண்டாம், உட்காருங்கள். நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, நீங்கள் கொடுத்ததையும் வாசித்து விட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உங்களுடைய அறிவிப்புக்கு உரிய வகையில் பதில் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மேலும் இதை விவாதப் பொருள் ஆக்க முடியாது, உட்காருங்கள்.

**திரு. இளம்வழுதி:** நான் கோரிக்கையாக வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை வைத்து விட்டீர்களே, போதும், உங்களுடைய கோரிக்கை இருக்கட்டும்.

(திரு. இளம்வழுதி அவையிலிருந்து வெளியேறினார்.)

## 3. தகவல் கோரல்-தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து

**திரு எஸ். டேனியல்ராஜ்:** நான் கொடுத்த பிரச்சினை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்ததை எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) இதுவும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைதான். அனுமதி மறுத்திருக்கிறேன். நீங்கள் வெளியே சென்று வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான்தான் இப்போது சொல்லுகிறேனே. (குறுக்கீடு) திரு. டேனியல்ராஜ், நீங்கள் கொடுத்த பிரச்சினைக்கும் அனுமதி மறுத்திருக்கிறேன், உட்காருங்கள்.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் காணாமல் போனது சம்பந்தமான பிரச்சினை ஒன்றைக் கொடுத்திருக்கிறேன். அது எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றிப் பிறகு எடுத்துக்கொள்கிறேன். இன்று எடுத்துக்கொள்ளவில்லை.